**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.18/2025**

**வழக்கு சாட்சி PW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சுப்புலட்சுமி** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : ----- | கணவர் பெயர் | : முருகன் |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 56/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 11.05.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை :**

நான் பண்ணைக்காட்டில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரரான சண்முகசுந்தரம் எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர். ஆஜர் எதிரியைத் தெரியும், அவரது பெயர் கருப்பச்சாமி , அவர் எங்களது ஊரைச் சேர்ந்தவர் . 23.01.2025ம் தேதி மாலை சுமார் 07.45 மணியளவில் சண்முகசுந்தரம் வீட்டில் இருந்து 30 அடி துாரத்தில் நான் நின்றுகொண்டிருந்தபோது சண்முகசுந்தரத்தின் மகள் கீர்த்தனா அலறும் சத்தம் கேட்டது , அதற்கு முன்பிருந்தே கருப்பச்சாமி சண்முகசுந்தரத்திடம் பேசி தகராறு செய்துகொண்டிருந்ததை நான் கவனித்து கொண்டிருந்தேன். கீர்த்தனாவின் சத்தம் கேட்டு நான் ஓடிச்சென்று பார்த்தபோது , கருப்பச்சாமி சண்முகசுந்ததின் வலது கை சுண்டு விரலை அரிவாளை கொண்டு வெட்டினார் . எதிரி கருப்பச்சாமி , சண்முகசுந்தரத்தை வெட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். பிறகு காயமுற்ற

சண்முகசுந்தரத்தை மதன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். பிறகு தாண்டிக்குடி காவல்நிலைய போலீசார் வந்து என்னை விசாரணை செய்தார்கள். மேற்சொன்ன விபரத்தை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என் வீட்டின் கதவு எண்.12/1 ஆகும். நாங்கள் வாடகைக்கு தான் உள்ளோம். நாங்கள் குடியிருக்கும் வீடு துரைச்சாமி செட்டியார் என்பவருக்கு சொந்தமான வீடாகும். நான் கூலி வேலைக்கு தான் சென்று வருகிறேன். சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். குத்தகை மற்றும் குத்தகை காட்டிற்கு வேலி போடுவது சம்பந்தமாகத்தான் சண்முகசுந்தரத்திற்கும் கருப்பச்சாமியும் பேசிக்கொண்டார்கள் என்றால் சரிதான். சண்முகசுந்தரமும், கருப்பச்சாமியும் தெலுங்கு மொழியில் தான் பேசிக்கொண்டார்கள் என்றால் சரிதான். சண்முகசுந்தரம் மற்றும் கருப்பச்சாமி பேசிக்கொண்டிருந்தபோது நான் எனது வீட்டில் சமையலறையினுள் இருந்தேன் என்றால் சரிதான். அலறும் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன் என்றால் சரிதான், நான் அப்படியே சண்முகசுந்தரம் வீட்டிற்கு போய்விட்டேன். வெட்டிய சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

கருப்பச்சாமி வடக்கு நோக்கி நின்று இருந்தார். சண்முகசுந்தரம் அவரது வீட்டின் திண்ணையில் மேற்கு திசை நோக்கி நின்று இருந்தார். சண்முகசுந்தரமும், கருப்பச்சாமியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையின்போது " நானும் முருகேசனும், சண்முகசுந்தரம் வீட்டின் முன்பு சென்றோம். அப்போது கருப்பச்சாமி, சண்முகசுந்தரம் வீட்டில் அத்துமீறி நுழைந்து ஏன்டா தேவிடியா மகனே நீ சொன்னால் தோட்டத்தை விட்டு வெளியே போகவேண்டுமா என்றுச்சொல்லி இடுப்பில் வைத்திருந்த

அரிவாளைக் கொண்டு சண்முகசுந்தரத்தை வெட்ட வந்தார் என்று " போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சண்முகசுந்தரத்தின் மகள் கீர்த்தனா என்பவர் அலறி சத்தம் போட்ட விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். குத்தகை பற்றிய விபரங்கள் நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் குத்தகையை பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். சம்பவத்திற்கு பிறகும் எதிரிக்கு 1 வருடம் குத்தகை உரிமை மீதம் உள்ளது என்றால் சரிதான் . சம்பவத்திற்கு முன்பு கருப்பச்சாமி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து காவல்நிலையத்தில் சண்முகசுந்தரத்தை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான் . போலீசார் விசாரணையில் சண்முகசுந்தரமும், கருப்பச்சாமியும் தெலுங்கில் பேசி சண்டைப்போட்டுக்கொண்டார்கள் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ தேதியன்று இரவு 08.30 மணியளவில் போலீசார் என்னை விசாரணை செய்தனர் . என்னை போலீசார் என் வீட்டில் வைத்துதான் விசாரணை செய்தார்கள். சண்முகசுந்தரம் பிரசிடன்ட் ஆக இருந்ததாலும் , எனக்கு வேண்டப்பட்டவர் என்பதாலும் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாகச் சொல்லி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.11 14:51:42 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.